# பெப்ரவரி – 04 – பொதுக்கால 05 ஞாயிறு

## அல்லேலூயா! நம்முடைய கடவுளைப் புகழ்ந்து பாடுவது நல்லது: திபா. 147:1

### முதல் வாசகம் : யோபு 7 : 1 - 4. 6 - 7

மண்ணில் வாழ்வது மனிதருக்குப் போரட்டந்தானே? அவர்களின் நாள்கள் கூலியாள்களின் நாள்களைப் போன்றவைதாமே? நிழலுக்கு ஏங்கும் அடிமை போலவும், கூலிக்குக் காத்திருக்கும் வேலையாள் போலவும், வெறுமையான திங்கள்கள் எனக்கு வாய்த்தன் இன்னல்மிகு இரவுகள் எனக்குப் பங்காயின. படுக்கும்போது எப்போது எழலாம் என்பேன்! இரவோ நீண்டிருக்கும் விடியும்வரை புரண்டு உழல்வேன், என் நாள்கள் தறியின் ஓடுகட்டையினும் விரைந்தோடுகின்றன் அவை நம்பிக்கையின்றி முடிவடைகின்றன. என் உயிர் வெறுங்காற்றே என்பதை நினைவுகூருவீர் என் கண்கள் மீண்டும் நன்மையைக் காணா.

**பதில்பாடல் :** நமது மீட்பின் ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்

### இரண்டாம் வாசகம் :1கொரிந்தியர் 9:16-19.22-23

சகோதர சகோதரிகளே! நான் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!இதை நானாக விரும்பிச் செய்தால் எனக்குக் கைம்மாறு உண்டு. நானாக விரும்பாவிட்டாலும் இது என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாக இருக்கிறது.அப்படியானால், எனக்குக் கைம்மாறு என்ன? உங்களுக்கு எச்செலவுமின்றி நற்செய்தியை அறிவிப்பதிலுள்ள மனநிறைவே அக்கைம்மாறு நான் நற்செய்தி அறிவிப்போருக்குரிய உரிமையைக் கொஞ்சம் கூடப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.நான் யாருக்கும் அடிமையாய் இல்லாதிருந்தும் பலரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர என்னை எல்லாருக்கும் அடிமையாக்கிக் கொண்டேன்.வலுவற்றவர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர வலுவற்றவர்களுக்கு வலுவற்றவனானேன். எப்படியாவது ஒரு சிலரையேனும் மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.நற்செய்தியால் வரும் ஆசியில் பங்கு பெறவேண்டி நற்செய்திக்காக எல்லாவற்றையும் செய்கிறேன்.

### நற்செய்தி : மாற்கு 1 : 29 - 39

அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும் தொழுகைக் கூடத்தை விட்டு வெளியே வந்து யாக்கோபு, யோவானுடன் சீமோன், அந்திரேயா ஆகியோரின் வீட்டிற்குள் சென்றார்கள்.சீமோனுடைய மாமியார் காய்ச்சலாய்க் கிடந்தார். உடனே அவர்கள் அதைப் பற்றி இயேசுவிடம் சொன்னார்கள்.இயேசு அவரருகில் சென்று கையைப் பிடித்து அவரைத் தூக்கினார். காய்ச்சல் அவரை விட்டு நீங்கிற்று. அவர் அவர்களுக்குப் பணிவிடை செய்தார்.மாலை வேளையில், கதிரவன் மறையும் நேரத்தில் நோயாளர்கள், பேய்பிடித்தவர்கள் அனைவரையும் மக்கள் அவரிடம் கொண்டுவந்தார்கள்.நகர் முழுவதும் வீட்டு வாயில்முன் கூடியிருந்தது.பல்வேறு பிணிகளால் வருந்திய பலரை அவர் குணப்படுத்தினார். பல பேய்களையும் ஓட்டினார் அந்தப் பேய்கள் அவரை அறிந்திருந்ததால் அவற்றை அவர் பேசவிடவில்லை.இயேசு விடியற்காலைக் கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்.சீமோனும் அவருடன் இருந்தவர்களும் அவரைத் தேடிச் சென்றார்கள். அவரைக் கண்டதும், ”எல்லாரும் உம்மைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்” என்றார்கள்.அதற்கு அவர், ”நாம் அடுத்த ஊர்களுக்குப் போவோம், வாருங்கள். அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும் ஏனெனில் இதற்காகவே நான் வந்திருக்கிறேன்” என்று சொன்னார்.பின்பு அவர் கலிலேய நாடுமுழுவதும் சென்று அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் நற்செய்தியைப் பறைசாற்றி பேய்களை ஓட்டி வந்தார்.

**தியானம்:** மற்றவரது தேவைகளில் தேடிச்சென்று உதவிசெய்வதும் இறைபணி எனப்படுவதால், அடுத்தவரது தேவைகளில் நாம் உதவிகள் செய்து ஆறுதலளிக்கும்போது, இறைமகனின் பிரசன்னத்தை உருவாக்கும் கருவிகளாக மாற்றடைகின்றோம் என்பதனையே இன்றைய நற்செய்தி மேலும் தெளிவுபடுத்துகின்றது. “வலுவற்றவர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர வலு அற்றவர்களுக்கு வலுவற்றவன் ஆனேன்” என புனித பவுலடிகள் கொரிந்திய மக்களுக்கு உதவியது போன்று, நாமும் அடுத்தவரது தேவையில் உதவுவதன் மூலம் கிறிஸ்துவை அறிவிக்கலாமல்லவா? இன்று எமது தாயகத்தில் எத்தனை இளம் விதவைகள் மட்டுமல்ல பலர் தமது வாழ்வில் ஏற்பட்ட விரக்தியால் தற்கொலை செய்து மடிகிறார்களே, அவ்வாறான மரணங்களைத் தடுப்பதற்கு நாம் ஏதோவொரு வகையில் முற்படுகின்றோமா? எமக்கு நிகழும் ஒவ்வொரு சம்பவங்கள் ஊடாகவும் நாம் இறைமகனை மற்றவருக்கு அறிவிக்கின்றோமா?. இறைமகன் இயேசுவோடு நெருக்கமான உறவு மேற்கொள்ள இவ்வுலக காரியங்கள் எமக்குத் தடையாக உள்ளனவா? அன்று இயேசுவைப் பின்தொடர்ந்த சீடர்களுக்கும், புனிதர்களுக்கும் இவ்வுலகக் காரியங்கள் தடையாக இருந்தனவே? எனினும், அவர்கள் அவ்வாறான தடைகளைத் தாண்டி இறைமகன் இசேுவையே முற்று முழுதாக நம்பி அவர் பின்னே செல்லவில்லையா?. பேதுருவின் மாமியாரின் காய்ச்சலைக் குணமாக்க இறைமகன் தாமாகவே (மாற்கு1:30-31) தேடிச் சென்றுள்ளார் எனச் சொல்லப்படுகின்றதே?. அவ்வாறாயின் இறைமகன் இயேசுவை நோக்கி நாம் தடைகளைத் தாண்டிச் செல்லும்போது எம்மை நோக்கி இறைமகன் எம்மையும் தேடி வருவார். என்பதனை நம்பி விசுவசிப்போம். தலைமைச் சீடர் பேதுரு மற்றும் புனிதர்கள், துறவிகள் போல இறைமகன் இயேசுவைப் பின்பற்ற எம்மால் முற்றுமுழுதாக முடியாவிடினும், எமது செயல்களை, நடவடிக்கைகளை மாற்றுவோம். அதுவே எமக்கு ஆசீர்வாதமாகட்டும். நாமும் விசுவாசம் மிக்கவர்களாக மாற்றமடைவோம். நெருங்கிவரும் இறுதிக்காலத்தில் முன்மதியோடு நடந்து விண்ணரசைச் சுதந்தரிப்போம்.